

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (03.06.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு130, வடபழனி, அம்மன் கோவில் தெரு, சிம்ஸ் மருத்துவமனை அருகில் தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடல் மற்றும் சிறுவர் விளையாட்டு பூங்காவினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.கருணாநிதி (தியாகராயநகர்), த.வேலு (மயிலாப்பூர்), துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மாமன்ற உறுப்பினர்கள் சு.பாஸ்கர், கே.ஏழுமலை, திருமதி ஆர்.ரத்னா லோகேஸ்வரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சீரிய திட்டங்களால்

# தமிழ்நாடு முழுவதும் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரிப்பு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தகவல்!

சென்னை, ஜூன் 4-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (02.06.2025) சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 2025-26ஆம் ஆண்டிற்கான புதிய பாடநூல்கள். சீருடைகள், நோட்டு புத்தகங்கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்களை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி. இந்நிகழ்வினை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வின் இறுதியில் செய்தியாளர் சந்திப்பில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்ததாவது:-

2025-26ஆம் கல்வி ஆண்டிற்கான புதிய பாட நூல்கள், சீருடைகள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்களை முதலமைச்சர் அவர்களே நேரடியாக சென்னை, திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு வருகை தந்து ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவச் செல்வங்களுக்கு வழங்கி, திட்டத்தினை இன்று தொடங்கி வைத்தார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் ஏதோ ஒரு விதத்தில் 14 வகையான கல்வி உபகரணப் பொருட்களில் சில உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்க மூன்று அல்லது நான்கு மாதங்கள் தாமதம் ஏற்படும். பள்ளி தொடங்கும் நாளிலேயே அனைத்து வகையான கல்வி உபகரணப் பொருட்களும் மாணவச் செல்வங்களுக்கு வழங்க வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்துதலின்படி, தமிழ்நாடு பாட நூல் மற்றும் கல்வியியல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, தமிழ்நாடு பாட நூல் மற்றும் கல்வியியல் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் சந்திர மோகன் வழிகாட்டு தலின்படி ரூபாய் 1141 கோடி மதிப்பீட்டில் சிறப்பாக இத்திட்டத்தினை செயல்படுத்தியுள்ளனர்.

முதலமைச்சர் எங்கள் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையின் அடிப்படையில், தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் முன்கூட்டியே ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, தர சோதனைகள் நடத்தி, பள்ளிக்கூடம் திறக்கும் நாளன்றே 100% மாணவச் செல்வங்களுக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் வழங்கப்பட்டு விடும் என பெருமையாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மேயர் சென்னை பெருநகர பட்ஜெட் கூட்டத்தொடரில் பல்வேறு அறிவிப்புகளை அறிவித்து செயல்படுத்தியதால் இந்தாண்டு சென்னை மாநகரப் பள்ளிகளில் மட்டும் 16000 புதிய மாணவர் சேர்க்கை நடைபெற்றுள்ளது. அதே போன்று ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதும் பள்ளிக் கல்வித்துறை சார்பாக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்கள் கொண்டு வந்ததன் காரணமாக தொடர்ந்து மாணவச் செல்வங்களுடைய சேர்க்கை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. அரசுப் பள்ளிகளில் இந்தாண்டு புதிய மாணவர் சேர்க்கை விவரங்கள் பின்னர் முழுமையாக தெரிவிக்கப்படும். முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு வழங்கக்கூடிய ஆக்கமும், ஊக்கமும் தான் இது போன்ற செயல்பாடுகளை நாங்கள் வெற்றிகரமாக செய்து முடிப்பதற்கு ஏதுவாக இருக்கின்றது.

தமிழ்நாடு அரசின் மூலமாக ஏற்கெனவே பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட RTE தொகையில் சுமார் ரூபாய் 600 கோடி நிலுவைத்தொகை இன்னும் ஒன்றிய அரசால் வழங்கப்படவில்லை. கடந்த மாதம் 16, 17 தேதிகளில் பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் ஆகியோர் நேரடியாக சென்று நிலுவைத் தொகையினை வழங்குமாறு வலியுறுத்தி வந்தனர். RTE நிலுவைத்தொகையினை ஒன்றிய அரசு வழங்காமல் இருப்பது இந்திய அரசியலமைப்பிற்கு எதிரானது என்பதால் இது சார்ந்து மாண்பமை உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு கழக ஆட்சி வந்ததில் இருந்து வாழ்வியல் திறன் சார்ந்திருக்கின்ற ஒரு புத்தகமும், ஒரு கைடும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்காக Moral Science சார்ந்த புத்தகமும் வழங்கப்பட்டுள்ளது. மாணவச் செல்வங்களை சிறந்த மனிதர்களாக்குவதில் ஒட்டு மொத்த சமுதாயத்திற்கும் பங்குள்ளது. நமது பிள்ளைகளை நல்வழிப் படுத்துவது நம் ஒவ்வொருவரின் கடமை. நமது பிள்ளைகள் எப்படி சாதனை புரிந்து கொண்டிருக்கிறார்கள், ஒவ்வொரு விதத்திலும் அந்த சாதனைக்கு எப்படிப்பட்ட அங்கீகாரத்தை முதலமைச்சர் வழங்கி கொண்டிருக்கின்றார்கள் என்பதையெல்லாம் நாம் கண் கூடாக பார்க்க முடிகின்றது.

தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று பரவல் வீரியம் குறைந்தது பயப்படத் தேவையில்லை என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்தார். எனவே கவலைப்படாமல் இருங்கள் இயல்பான வாழ்க்கை வாழலாம்.

மேற்கண்டவாறு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.



முத்தமிழறிஞரின் செம்மொழி நாள் விழாவை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (3.6.2025). சென்னை, எழும்பூர். அரசு மகப்பேறு மருத்துவமனையில் ஜூன் 1 முதல் நேற்று வரை பிறந்த 75 குழந்தைகளுக்கு தங்க மோதிரம், ஊட்டச்சத்து பெட்டகம் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர். பிரியா. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிசந்திரன், அரசு மகப்பேறு மருத்துவமனை இயக்குநர் டாக்டர் சுமதி. பகுதி செயலாளர்கள் வி.சுதாகர், சொ.வேலு, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன், பொதுக்குழு உறுப்பினர் திருமதி.நிர்மலா தேவி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.ராஜேஷ்வரி ஸ்ரீதர், திருமதி.பாத்திமா முசாபர், பரிதி இளம்சுருதி, சுந்தராஜன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### ஆ.இராசா எம்.பி. தலைமை! அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முன்னிலை!

# திருவள்ளூர் கிழக்கு பொன்னேரி - கும்மிடிப்பூண்டி தொகுதி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிவிப்பு!

திருவள்ளூர், ஜூன் 04;

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி மற்றும் பொன்னேரி தொகுதி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் கழகத் துணைப் பொதுச் செயலாளரும் மண்டல பொறுப்பாளருமான ஆ.இராசா எம்.பி. தலைமையில் சிறுபாண்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முன்னிலையில் நடைபெறுகிறது இதில் கும்மிடிப்பூண்டி தொகுதிகுட்பட்ட கூட்டம் நாளை 05.06.2025 வியாழன் கிழமை அன்று மாலை 04.00 மணியவில் பெரியபாளையம் தண்டலம் அருகே உள்ள கிரேஸ்கூட் ஒட்டலில் நடைபெறுகிறது.

இதில் தொகுதி பார்வையாளர் அழகிரி சதாசிவம் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இ.ஏ.பி. சிவாஜி, டி.ஜெ.கோவிந்தராஜன், எம்.எல்.ஏ, பி.ஜெ.மூர்த்தி, மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், ஜி.ஸ்டாலின், மாவட்ட நிர்வாகிகள் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.இரவி, எஸ்.ரமேஷ், ஏ.வி.ராமமூர்த்தி, பி.வெங்கடாசலபதி, பா.செ.குணசேகரன், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் கி.வே.ஆனந்தகுமார், மு.மணிபாலன், ந.பரிமளம், டி.கே.சந்திரசேகர், ஆ.சத்தியவேலு, ஜான் (எ) பொன்னுசாமி, அபிராமி குமரவேல், இரா.அறிவழகன், பேரூராட்சி தலைவர்கள் அப்துல் ரஷித், சகிலாஅறிவழகன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.வி.லோகேஷ், மு.பாஸ்கர், எஸ்.கோபி, கே.ஆறுமுகம்,ஜி.ரமேஷ், டி. மணி, எம்.ஆர்.ஸ்ரீதர், பா.தன சேகரன், என்.கிருஷ்ணமூர்த்தி, கா.சம்பத், ஜெயலலிதா, க.செல்லமுத்து, வி.பி.ரவிக்குமார், கே. ராஜேஷ், பி.மணிகண்டன், ஆகியோர் கலந்து கொள்ள வேண்டும்

அதேபோல் மாலை 5.00 மணியளவில் : வேம்பாக்கத்தில் உள்ள AAM மஹாலில். பொன்னேரி தொகுதி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டமும் நடைபெறுகிறது இதில் தொகுதி பார்வையாளர் தமிழ் கா.அமுதரசன், மாவட்ட அவைத்தலைவர் மு.பகலவன், மாநில நிர்வாகிகள் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ. அன்புவாணன், கே.சுரேஷ், மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், கே.சுப்பிரமணி, டாக்டர். கே.பரிமளம்விஸ்வநாதன் , ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் .ந.செல்வசேகரன், மு.முரளிதரன், கா.சு.ஜெகதீசன், ஆ.ராஜா, ஞாயிறு வே. ஆனந்த் குமார், ஏ.ஆர்.டி.உதயசூரியன், ஜி.இரவிகுமார். பி.முத்து, கா.சு.தமிழ் உதயன், பேரூராட்சி மன்ற தலைவர் ருக்குமணி மோகன் ராஜ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வெற்றி (எ) ராஜேஷ், அ.முகமது அலவி, ஜி.பி.வெங்கடேசன், ஏ.கே.சம்பத்குமார். ரோஸ் பொன்னையன், தேசராணி தேசப்பன், மு.தினகரன், என். வில்சன், ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்கிறோம் என இவ்வாறு மாவட்ட கழக பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் அறிக்கையின் வாயிலாக தெரிவித்துக் கொண்டார்.


